LIBRARY EASTERN UNIVERSITY, SRI LANKA 2 MAY 2022

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டிற்கான சிறப்புக் கல்விமாணித் தேர்வு – (2012/2013) (ஜுன்/ஜுலை - 2017)

## EDS 3133 – முகாமைத்துவ கோட்பாடுகளும் செயன்முறையும் (Management Theories and Practice)

நேரம் - 03 மணித்தியாலங்கள்

விரும்பிய நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

1. (அ) முகாமைத்துவம் எனும் பதத்திற்கு பல்வேறு அறிஞர்கள் குறிப்பிட்ட வரைவிலக்கணங்களுள் ஐந்தைக் (05) குறிப்பிட்டு அவற்றைச் சுருக்கமாக விளக்குக? (07 புள்ளிகள்)

(ஆ) வினைத்திறன் மிக்க முகாமைத்துவம் ஒன்றில் காணப்படும் முகாமைத்துவ கருமங்களை உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டுக? (08 புள்ளிகள்)

(இ) முகாமைத்துவ தொழிற்பாடுகள் எத்தகைய வினைத்திறன் மிக்க செயற்பாடுகள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன என்பதை விளக்குக? (10 புள்ளிகள்)

2. (அ) சமூக உளவியல் பேராசிரியரான Abraham Zaleznik இன் கருத்துப்படி "முகாமையாளரும் தலைவரும் வேறுபட்டவர்கள்" என்பதற்கிணங்க முகாமையாளருக்கும் தலைவருக்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குக? (07 புள்ளிகள்)

(ஆ) பாடசாலையானது அபிவிருத்திப் பாதையில் செல்வதற்கு அதிபரிடம் காணப்பட வேண்டிய முகாமைத்துவ திறன்களை ஆராய்க? (08 புள்ளிகள்)

(இ) விளைதிறன் மிக்க பாடசாலையாக உருவாகுவதற்கு பாடசாலைக் கட்டமைப்பு எவ்வாறு காணப்பட வேண்டும் என்பதை உதாரணங்களுடன் தற்கால நடைமுறைக்கு ஏற்றவாறு ஆராய்க? (10 புள்ளிகள்)

3. (அ) ஹென்றி பயோலின் முகாமைத்துவ தத்துவங்களை நடைமுறை உதாரணங்களினூடாக சுருக்கமாக விளக்குக? (07 புள்ளிகள்)

(ஆ) பிரட்ரிக் டபிள்யு ரெயிலரின் முகாமைத்துவ சிந்தனைகளையும் எல்ரன் மயோவின் முகாமைத்துவ சிந்தனைகளையும் ஒப்பிட்டு ஆராய்க? (08 புள்ளிகள்)

(இ) டக்ளஸ் மக்றகர் தனது Y கோட்பாட்டில் முன்வைத்த கருத்துக்களை பாடசாலையின் தலைவர் எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பதை நடைமுறை உதாரணங்களுடன் விளக்குக? (10 புள்ளிகள்)

4. (அ) நவீன மானிட உளவியல் கோட்பாட்டாளர்களில் ஒருவராகக் காணப்படும் மாஸ்லோவின் தேவைக்கோட்பாட்டினை வகுப்பறை முகாமைத்துவத்தில் ஆசிரியர்கள் எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பதை நடைமுறை உதாரணங்களுடன் விளக்குக? (13 புள்ளிகள்)

(ஆ) பீட்டர் ட்றக்கர் குறிப்பிடும் முகாமைத்துவ கருத்துக்களை தற்காலத்தில் நிறுவனம் ஒன்றில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள சாதக, பாதக தன்மைகளை ஆராய்க?

(12 புள்ளிகள்)

5. (அ) பாடசாலையில் மாற்றங்களைக் கொண்டுவரும்போது ஆசிரியர்கள் எதிர்ப்பதற்கான காரணங்களை உதாரணங்களுடன் விளக்குக? (07 புள்ளிகள்)

(ஆ) கல்வி முகாமைத்துவ தகவல் தொகுதியின் (EMIS) முக்கியத்துவத்தை நடைமுறை உலகுடன் தொடர்புபடுத்தி விளக்குக? (09 புள்ளிகள்)

(இ) பாடசாலை மட்ட முகாமைத்துவத்தின் (SBM) நோக்கங்களைக் குறிப்பிட்டு அதிலுள்ள குறைபாடுகளை சுருக்கமாக ஆராய்க? (09 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றை சுருக்கமாக விளக்குக.

(அ) குறிக்கோள் சார்ந்த முகாமைத்துவம் (MBO) என்பதற்கு ஜோர்ஜ். எஸ் ஒடியோன் குறிப்பிடும் வரைவிலக்கணம்

(ஆ) நிறுவனமொன்றின் குறிக்கோள் சார்ந்த முகாமைத்துவத்தை பயன்படுத்துவதற்கான காரணங்கள்

(இ) பாடசாலையில் நேரத்தை விரயமாக்கும் சந்தர்ப்பங்கள்

(ஈ) பாடசாலையில் முரண்பாடுகள் ஏற்படுவதற்கான காரணங்கள்

(உ) முகாமையாளரின் சிறந்த தொடர்பாடலின் முக்கியத்துவம்

(5 x 5 = 25 புள்ளிகள்)